புரட்சிப்
# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்
• திருவள்ளுவர் ஆண்டு 2056 • பிப்ரவரி 27, 2025 • புரட்சி 25 • முழக்கம் 07 • விலை ரூ.3.00

# பெரியார் இன்னும் ஏன் எதிரிகளை பதற வைக்கிறார்?


## வாங்க வரலாறு பேசுவோம்...பரப்புரைப் பயணம்

**இப்போதைய பேசுபொருளாய் எதிர்மறையாய் உருவாக்கப்பட்டிருக்கிற அரசியல் சூழலை, நேர்மறையாய் எடுத்துச் செல்லும் நோக்கத்தோடு திராவிடர் விடுதலைக் கழகம் தமிழ்நாட்டின் நான்கு முனைகளில் இருந்து பரப்புரை பயணம் நடத்துகிறது. நிறைவாக மயிலாடுதுறையில் மாநாடு நடைபெறவுள்ளது.**

ஏனென்றால், பெரியார் மறைந்து அரை நூற்றாண்டுகளைக் கடந்துவிட்டோம். இப்போதும் தமிழ்நாட்டின் விவாதப் பொருள் பெரியாரை சுற்றியே இருக்கிறது.தமிழ்நாட்டின் எல்லா போராட்டக் களங்களிலும் பெரியார் இடம்பெறுகிறார், அவரது கருத்துக்கள் பேசப்படுகின்றன. தமிழ்நாட்டை ஆதிக்கம் செலுத்தத் துடிக்கும் இந்தித் திணிப்புக்கு எதிராக அரண்போல நிற்கிறார் பெரியார். மதவாத சக்திகள் தமிழ்நாட்டை வன்முறைக்காடாக்க முயற்சிக்கும் களங்களில் சமத்துவ நெருப்பாக அவர்களின் எண்ணத்தை சுட்டுப் பொசுக்குகிறார் பெரியார். பிற்படுத்தப்பட்ட,தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களைக் கல்வியில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்று துடிக்கும் வருணாசிரமாவதிகளுக்கு தமிழ்நாட்டில் மரண அடி கொடுத்து எதிர்த்து நிற்கிறது பெரியார் விதைத்துவிட்டுச் சென்ற கல்வி குறித்தான விழிப்புணர்வு சிந்தனைகள்.

பெரியாரை எப்படி எதிர்கொள்வது என்றே தெரியாத ஆரியக் கூட்டத்திற்குக் கூலிப்படை போல கிடைத்திருக்கிறார்கள் சிலர். அவர்களை வைத்து **”தமிழைக் கொச்சைப்படுத்திவிட்டார் பெரியார், அவர் ஒன்றும் ஜாதியை எதிர்க்கவில்லை,**

**பெரியார் தமிழர் இல்லை என்பதால் திராவிடம் என்ற மாயையைத் திணித்துவிட்டார், திராவிடம்தான் தமிழ்நாட்டை நாசப்படுத்திவிட்டது, பார்ப்பனர்கள் தமிழர்களே, பெரியார் பெண்ணுரிமையைப் பேசவில்லை, மாறாக பெண்களை இழிவுபடுத்தியதுதான் அவர் செய்த வேலை”** என்றெல்லாம் பெரியாருக்கு எதிரான அவதூறைக் கட்டமைக்க முயன்று கொண்டிருக்கிறது அந்த கூட்டம். அதற்கு தமிழ்தேசியம் என்று அவர்களே பெயரும் சூட்டிக்கொண்டனர்.



ஒருகாலத்தில் பார்ப்பனர்களே நேரடியாக செய்துவந்த இத்தகைய அவதூறுகளை, வெறுப்புப் பிரச்சாரத்தை இப்போது தமிழ்தேசியத்தின் பெயரால் செய்யும்போது, பெரியார் பிம்பத்தை உடைத்துவிடலாம் என்பது அவர்களின் மனக்கணக்கு. ஆனால் வாழ்ந்த காலத்திலும் சரி, மறைந்துவிட்ட பின்பும் சரி எதிர்ப்புப் பிரச்சாரத்தால்தான் பெரியார் வேகமாக வளர்ந்திருக்கிறார். இப்போது பெரியார் குறித்து சீமான், மணியரசன் போன்றோர் வைக்கும் விமர்சனங்களை வாய்ப்பாக வைத்துக்கொண்டு, **”பெரியார் இன்னும் ஏன் எதிரிகளை பதற வைக்கிறார்?”** என்ற தலைப்பில் வரலாற்றை எடுத்துச் சொல்ல தமிழ்நாட்டின் ஐந்து முனைகளில் இருந்து புறப்படுகிறது திராவிடர் விடுதலைக் கழகத்தின் பரப்புரை குழுக்கள்.

பெரியார் பற்றிய வரலாற்றை எடுத்துச் சொல்வது மட்டுமின்றி, பெரியாரை விமர்சித்துக்கொண்டே திரைமறைவில் தமிழர்- தமிழ்நாட்டின் கல்வி- வேலைவாய்ப்பு- சமூக நீதி உரிமைகளுக்கு எதிராக ஒன்றிய அரசு செய்துகொண்டிருக்கும் நாசகர முயற்சிகளையும், அதற்குத் துணைபோகும் சங்கிகளின் நண்பர்களின் உண்மை முகத்தையும் தோலுரித்துக் காட்ட புறப்படுகிறது கழகம்.

துண்டறிக்கைகள், பெரியார் பற்றிய இளைஞர்களுக்கு எளிதாக புரிந்து கொள்ளக் கூடிய கழகப் புத்தகங்கள், பறை இசை, நாடகங்கள் போன்ற கலை நிகழ்ச்சிகள் வழியாக பரப்புரைப் பயணத்தின் நோக்கத்தை மக்கள் மத்தியில் எடுத்த செல்ல உள்ளது. ஒவ்வொரு நாளும் காலை முதல் மாலை வரை ஒரு மாவட்டத்தில் 4 கூட்டங்கள் தொடர்ச்சியாக ஐந்து முனைகளில் நடக்கும்.

சென்னை, விழுப்புரம், சேலம், ஈரோடு, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் 500 பரப்புரை கூட்டங்களை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

15.3.2025 அன்று தொடங்கி 22.3.2025 மயிலாடுதுறையில் நிறைவு பொதுக்கூட்டமாக நடைபெற உள்ளது. கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும் பெருந்திரளாகப் பங்கேற்று பரப்புரைப் பயணத்தின் நோக்கத்தை வெற்றி பெறச் செய்வீர்...

## ஏன் இந்த பரப்புரைப் பயணம்?

தேர்தல் அரசியலில் இருந்து ஒதுங்கி சமுதாய இயக்கமாக தமிழர் நலனுக்காக அரை நூற்றாண்டுக்கு மேலாக ஓயாது உழைத்தவர் பெரியார்.

ஜாதிய ஏற்றத்தாழ்வு இல்லாத, பாலினப் பாகுபாடு இல்லாத ஒரு சமத்துவ சமூகம் மலர வேண்டும் என்று தன் வாழ்நாளை ஒப்படைத்துக்கொண்டு பாடுபட்டவர் பெரியார்.

மக்கள் ஆதரிப்பதைப் பேசி, அவர்களின் நன்மதிப்பை பெற வேண்டும் என்ற எண்ணத்திற்கு மாறாக மக்கள் பின்பற்றிய மூடத்தனங்களை மிகக் கடுமையாக எதிர்த்தவர் பெரியார்.

தன் மீது கல், முட்டை, செருப்பு போன்றவை வீசப்பட்டபோது கூட ஓடி ஒளிந்து கொள்ளாமல், தனக்கு சரியெனப்பட்டதை வெளிப்படையாகப் பேசியவர் பெரியார்.

குடலிறக்க வலியோடும், மூத்திரச் சட்டியோடும் வாழ்நாளின் கடைசிவரை தமிழ் மக்களின் தன்மானத்திற்காகப் பேசியவர் பெரியார்.

கல்வி எட்டாக்கனியாக இருந்த தமிழர்களுக்கு விழிப்புணர்வு ஊட்டி ஒரு நூற்றாண்டில் கல்வியில் சிறந்த தமிழ்நாடு உருவாகக் காரணம் பெரியார்.

எல்லாவற்றுக்கும் மேலாக சுயமரியாதைச் சிந்தனையைத் தமிழர்களுக்குக் கடத்தியவர் தந்தை பெரியார்.

ஆனால் இன்றைக்குப் பெரியாரைக் கொச்சைப்படுத்த ஆரியத்தின் கைக்கூலிகளாக ஒரு கூட்டம் தமிழ்தேசியத்தின் பெயரால் கிளம்பியிருக்கிறது.

ஜாதி இழிவைத் தமிழர்கள் மீது திணித்தப் பார்ப்பனர்களை சமத்துவம் போதித்தவர்கள் என்று நா கூசாமல் பேசுகிறது அந்தக் கூட்டம்.

புலவர்களிடையே முடங்கிக் கிடந்த திருக்குறளைப் பட்டிதொட்டியெங்கும் பரப்பியப் பெரியாரைப் பார்த்து திருக்குறளை இழிவுபடுத்தியவர் என்கிறது அந்த கூட்டம்.

பெயருக்குப் பின்னால் ஜாதிப் பட்டத்தை தமிழ்நாடு மட்டும் விட்டொழித்ததற்கு காரணமான பெரியாரைப் பார்த்து ஜாதியவாதி எனப் பழிக்கிறது அந்த கூட்டம்.

பெரியார் மீதும் திராவிட இயக்கத்தின் மீதும் ஆரியப் பகைவர்கள் வைத்த அதே வசைச்சொற்களைத்தான் இன்று தமிழ்தேசியத்தின் பெயராலும் சிலரால் வைக்கப்படுகிறது.

அவர்கள் முன்வைப்பது தமிழ்தேசியமும் அல்ல; தமிழர்கள் நலனுக்கானதும் அல்ல; திராவிடத்திற்கு நேரெதிரான ஆரியத்திற்குத் துணைபோகும் சந்தர்ப்பவாதம் அவை.

நீட்டைத்திணித்து,புதிய கல்விக்கொள்கையைத் திணித்து, மும்மொழிக் கொள்கையைத் திணித்து தமிழர்களின் கல்வி உரிமையைப் பறிப்போரைப் பற்றி அவர்களுக்கு கவலையில்லை.

இந்தித் திணிப்பால் ஏற்படப்போகும் தமிழர்களின் தனித்துவமான பண்பாட்டு அழிப்பைப் பற்றி அவர்களுக்குக் கவலையில்லை.

ஜிஎஸ்டியைத் திணித்து, மாநில உரிமைகளை ஒவ்வொன்றாகப் பறித்துக்கொண்டிருக்கும் பாஜகவின் நாசகர செயலைப்பற்றி அவர்கள் வாய் திறக்க மாட்டார்கள்.

தமிழ்நாடு என்றொரு மாநிலத்தையே இல்லாமல் செய்யத் துடிக்கும் ஒன்றிய பாஜக அரசின் சதித்திட்டங்களைப் பற்றிப் பேச மறுப்பார்கள் அவர்கள்.

வட மாநிலங்களில் மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்து தென்மாநிலங்களின் எண்ணிக்கையைக் குறைத்து ஒடுக்க நினைக்கும் ஒன்றிய அரசின் முயற்சி குறித்து அவர்கள் வாய் திறக்கவில்லை.

ஆனால் ஒன்றிய ஆட்சியாளர்களை நோக்கி உரிமைக்குரல் எழுப்பினால், அவர்களின் ஏவல் நாய்கள் போல இங்கே திராவிடத்திற்கு எதிராக கூச்சலிடுவதுதான் இவர்களின் வாடிக்கை

அதனால் சமீப காலமாக பெரியாரைக் கடித்துக் குதறி, அவர் மீது தமிழர்கள் கொண்டிருக்கிற பிம்பத்தை உடைத்துவிடலாம் என்று அவர்கள் கருதுகிறார்கள்

இந்துத்துவ மதவெறியை எதிர்த்து தமிழ்நாட்டின் நலன்களுக்கு அரணாக நிற்கும் திராவிட இயக்கங்கள் தமிழர்களுக்கு எதிரானதாம்!

தொடர்ச்சி 2–ஆம் பக்கம்

### தலையங்கம்

# மொழிப்போருக்கு தமிழ்நாடு தயார்!

ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டுக்குத் தர வேண்டிய 2,152 கோடி ரூபாய் நிதியை விடுவிக்க வேண்டுமென்று தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. ஆனால் புதிய கல்விக்கொள்கையின்படி மும்மொழிக்கொள்கையை ஏற்றுக்கொண்டால் மட்டுமே அந்த நிதியை விடுவிப்போம் என்று அடாவடியாக பேசியிருக்கிறார் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான். கல்வி என்பது ஒத்திசைவுப் பட்டியலில் உள்ளபோது, ஒன்றிய அரசு தன்னிச்சையாக ஒன்றை உருவாக்கி, அதனை ஏற்றுக்கொண்டால்தான், மற்ற திட்டங்களுக்கு நிதி கொடுப்போம் என்று பேசுவதென்பது அரசியலமைப்புக்கு விரோதமானது.

தமிழ்நாட்டின் கொள்கையே இருமொழிதான் என்பதை இன்றைய திமுக அரசு மட்டுமல்ல, பாஜகவின் அடிமை அரசாக இதற்கு முன்பிருந்த அதிமுகவே தெளிவுபடுத்தியிருக்கிறது. உள்ளூர் தொடர்புக்குத் தாய்மொழி, உலகத் தொடர்புக்கு ஆங்கிலம், இதைத்தவிர இன்னொரு மொழி எந்த வகையிலும் தமிழ்நாட்டுக்கு தேவைப்படவில்லை. அப்படியே பணி நிமித்தமாக எந்தவொரு மொழியையும் கற்றுக்கொள்ள வேண்டிய தேவைப்பட்டால் அது தனிநபரின் விருப்பத்துக்கு உட்பட்டது, தேவைக்குட்பட்டது. யாரும் கற்றுக்கொள்ளக்கூடாது என்று வலியுறுத்தப்போவதில்லை.

ஆனால் கட்டாயமாக மூன்றாவதாக ஒரு மொழியை படித்தே தீர வேண்டுமென்று வலியுறுத்துவதன் பின்னால் உள்ள சதிதான் ‘இந்தித் திணிப்பு’. தமிழ்நாடு உட்பட தென் மாநிலங்களில் மும்மொழி கற்றுத்தர வேண்டுமென்று கூச்சலிடும் சங் பரிவார்கள், அவர்கள் ஆளும் வட இந்திய மாநிலங்களில் அவரவர் தாய்மொழியைக் கூட ஒழுங்காகக் கற்றுத்தருவதில்லை. இந்தி மட்டுமே முதன்மை மொழியாக கற்றுத்தரப்படுகிறது. ஆங்கிலம் அரைகுறையாக கற்றுத்தரப்படுகிறது, அடுத்து சமஸ்கிருதம் எட்டிப்பார்க்கிறது.

தென் மாநிலங்களில் ஆங்கிலம் கற்றுத் தரப்படுவதைப் போல, வட இந்திய மாநிலங்களிலும் ஆங்கிலம் கற்றுத்தரப்பட்டால் மூன்றாவதாக ஒரு மொழியே தேவைப்படாது என்று தமிழ்நாடு எழுப்பும் நியாயமான குரலை அவர்கள் ஏற்கத் தயாராக இல்லை. ஏனென்றால் அவர்களின் நோக்கம் மொழி தெரியாத இருவர் சந்தித்துக்கொண்டால் எப்படிப் பேசிக்கொள்வார்கள் என்ற கவலையல்ல. மாறாக, இந்தித் திணிப்பின் ஊடாக இந்து தேசிய கலாச்சாரத்தை திணிப்பதும், பன்முகத்தன்மை நிறைந்த பிராந்திய அடையாளங்களை அழிப்பதுமே. அத்தகைய பன்முகத்தன்மை வட இந்தியாவில் முற்றிலுமாக அழிக்கப்பட்டு இந்து-இந்தி- இந்திய கலாச்சாரம் முழுமையாகத் திணிக்கப்பட்டுவிட்டது. அதன் மூலம் கிடைக்கும் இனவெறுப்பு சிந்தனைவாதம் பாஜக- ஆர்எஸ்எஸ் நடத்திக்கொண்டிருக்கும் அருவருப்பு அரசியலுக்கு ஆயுதமாகப் பயன்படுகின்றன.

ஆனால் தமிழ்நாடு அதில் இருந்து விலகி தனித்துவமாக நிற்கிறது என்பதை சங் பரிவார் கும்பலால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. தமிழ்நாடு தமிழ் மொழியைக் காப்பாற்றி வைத்திருப்பதையும், இந்தி ஆதிக்கத்தை ஏற்க மறுப்பதுமே இதற்குக் காரணம், எனினும் நேரடியாக இந்தியைத் திணித்தால் ஒவ்வொரு முறையும் தமிழர்கள் விழித்துக்கொள்கிறார்கள், அதனால் இம்முறை ‘இந்தி’ என்று சொல்லாமல், மூன்றாவது மொழி எனச் சொல்லிப்பார்க்கலாம் என்று முயற்சித்துப் பார்க்கிறார்கள். பின்வாசல் வழியாக இந்தியைத் திணிக்க முயலும் மலிவான நடவடிக்கை இது என்பதை தமிழ்நாடு நன்கு அறியும்.

மூன்றாவது மொழியாக இந்தி, சமஸ்கிருதத்தைத் தவிர்த்துவிட்டு வேறொரு மொழியை கற்றுத்தர பாஜக ஆளும் எந்த மாநிலமும் இதுவரை முன்வரவில்லை. எந்தமொழியையும் கற்றுத்தரலாம் என்பதை பெயருக்கு கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டார்களே தவிர, இந்தி-சமஸ்கிருதம் தவிர்த்து வேறு மொழிகளுக்கு ஆசிரியர்கள் நியமிக்கவோ, அதற்காக நிதி ஒதுக்கவோ முன்வரவில்லை. ஆனால் 2019-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இந்தி ஆசிரியர்களை நியமிக்க 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியது ஒன்றிய அரசு. இதுபோல வேறு எதாவது ஒரே ஒரு மாநில மொழிக்காவது ஒன்றிய அரசு நிதி ஒதுக்கியுள்ளதா என்றால் நிச்சயம் இல்லை.

தமிழ்நாட்டில் செயல்படும் ஒன்றிய அரசின் கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் கூட தமிழ் முறையாகக் கற்றுத்தரப்படுவதில்லை. ஆனால் மும்மொழி திட்டத்தில் ஏதோ ஒரு மாநிலத்தில் இவர்கள் மூன்றாவது மொழியாக தமிழைக் கற்றுத்தருவார்கள் என்று பெருமை பேசுகிறது இங்குள்ள பாஜக. ஏதோ ஒரு மாநிலத்தில் வாழும் மக்களுக்குத் தமிழ் ஏன் அவசியப்படப்போகிறது என்பதே நமது கேள்வி. நமக்கு எப்படி மலையாளமோ, கன்னடமோ, தெலுங்கோ, போஜ்புரியோ, குஜராத்தியோ தேவைப்படுவதில்லையோ அதுபோலத்தான் அவர்களுக்குத் தமிழும் தேவைப்படாது. ஆனால் தமிழ்நாட்டிலேயே தமிழை அழித்துவிட்டு இந்தியைப் புகுத்த முயற்சிக்கும் இந்த சதிகாரர்கள், மற்றொரு மாநிலத்தில் மூன்றாவது மொழியாக தமிழ் கற்றுத்தருவார்கள் என்று பேசுவது கடைந்தெடுத்த அயோக்கியத்தனமே அன்றி வேறில்லை.

தமிழ்நாட்டில் இந்தியைத் திணிக்க நடக்கும் முயற்சிகள் இந்திய ஒன்றியத்தின் கட்டமைப்புக்குத்தான் பலவீனத்தை ஏற்படுத்துமே தவிர, ஒருபோதும் தமிழர்களை பலவீனப்படுத்தாது. மாறாக தமிழர்களின் ஒற்றுமையை வலுப்படுத்தி, பாஜக கட்டமைக்க முயற்சிக்கும் ஆரிய இந்து-இந்தி-இந்தியாவின் மீது வெறுப்பையே கூட்டும். தேவைப்பட்டால் மீண்டும் ஒரு மொழிப்போரைத் தொடங்க தமிழ்நாடு தயாராகவே இருக்கிறது. அந்த சூழ்நிலைக்கு தமிழர்களை தள்ளிவிடாமல் தடுக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் ஒன்றிய அரசுக்கே இருக்கிறது. ஒன்றிய அரசுதான் நிதானித்துக்கொள்ள வேண்டும்

# கும்ப மேளாவில் கொடிகட்டிப் பறந்த திருட்டுத்தொழில்!

உத்தரப் பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் ஜனவரி 13-ஆம் தேதிமுதல் பிப்ரவரி 26-ஆம் தேதி வரை கும்ப மேளா நடைபெற்றது. உலகின் மிகப்பெரிய ஆன்மிகத் திருவிழா என பாஜக மார்தட்டிக் கொண்டிருக்கிறது. ஆனால் உலகில் எங்குமே நடக்காத பேரவலங்கள் அங்கே நடந்தன. கோடிக்கணக்கான பேர் கூடியதாக செய்திகள் வந்தன. ஆனால் சில லட்சம் பேரை கையாளும் திறன் கூட உத்தரப் பிரதேச பாஜக அரசுக்கு இல்லை. போதுமான எண்ணிக்கையில் பேருந்துகள் இல்லை, ரயில்கள் இல்லை, போக்குவரத்து வசதியே இல்லை. ரயில்களில் கண்ணாடிக் கதவுகளை உடைத்துக்கொண்டே உள்ளே ஏறிய காணொளிகளைப் பார்த்தோம். ஜனவரி மாதம் இறுதியில் கூட்டநெரிசலில் சிக்கி 30க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். காயமடைந்தோர் பற்றிய தெளிவான விவரம் இதுவரை வெளியிடப்படவில்லை.

இவற்றுக்கெல்லாம் மேலாக, “கங்கை நதியின் தரம் குளிப்பதற்கான முதன்மை நீரின் தரத்துடன் ஒத்துப்போகவில்லை. கங்கை நீர் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட அனைத்து இடங்களிலும், மல பாக்டீரியாக்கள் எனப்படும் ஃபெக்கல் கோலிஃபார்ம் அதிகரித்துள்ளது. தற்போது மகா கும்பமேளாவில் மக்கள் கங்கை நீரில் குளிப்பதாலும், காணிக்கைகளை அங்கேயே விடுவதாலும் நீரின் தரம் மேலும் மோசமடையும். இந்தப் பகுதியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் பொதுவாக செயல்பட்டு வந்தாலும், மத சடங்குகளின்போது மாசுபாடு அளவு அதிகரித்துள்ளது” என்று தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் ஒன்றிய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. அந்த கங்கை நதியில்தான் பிரதமர் மோடி நீராடினார், குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு நீராடினார், கோடிக்கணக்கான மக்கள் நீராடினர்.

இந்தக் கொடுமைகளே பரவாயில்லை என்று சொல்லத்தக்க வகையில், கும்பமேளா கூட்டத்தில் திருட்டுத்தொழில் கொடிகட்டிப் பறந்திருக்கிறது. ஜனவரி 13-ஆம் தேதி முதல் கும்பமேளாவின் இறுதிநாட்கள் வரை 300-க்கும் மேற்பட்ட திருட்டுச் சம்பவங்கள் கும்பமேளாவில் பதிவாகியுள்ளன. குறிப்பாக தாரகஞ்ச் மற்றும் கும்பமேளா கோட்வாலி காவல் நிலையங்களில் மட்டும் 315 முதல் தகவல் அறிக்கைகள் பதிவாகியுள்ளன. அவற்றில் பெரும்பாலும் திருட்டு மற்றும் செயின் பறிப்பு தொடர்பான வழக்குகளே அதிகம். நகை, பணம், மொபைல்போன், கைப்பைகள், இரண்டு சக்கர வாகனங்கள் என கும்பமேளா கூட்டத்தில் கிடைத்ததையெல்லாம் வாரி சுருட்டிக்கொண்டனர் கொள்ளையர்கள்.

இதுபோதாதென்று கங்கை நதியில் பெண்கள் நீராடியபோது வீடியோக்கள் எடுக்கப்பட்டு, அதை ஆன்லைனில் விற்றிருக்கிறது ஒரு கும்பல். அந்த வீடியோக்கள் சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு, கடும் எதிர்ப்புகள் கிளம்பிய பிறகு அம்மாநில அரசால் முடக்கப்பட்டிருக்கிறது. பக்தியின் பெயரால் இத்தனை சீரழிவுகள் துணிச்சலோடு நடக்கிறது. ஆனால் இதுதான் உலகின் மிகப்பெரிய ஆன்மீகத் திருவிழாவாம்! இந்துத்துவ கும்பலின் இத்தகைய பக்தி வியாபாரங்கள் பரிதாபம் தருகிறது!

முதல் பக்க தொடர்ச்சி

தமிழினத் தலைவர் பெரியாரைத் தூற்றிப்பேசி, அம்பலப்பட்டு நிற்கும் இந்த போலித் தமிழ்த்தேசிய கும்பலின் முகத்திரையையும் அவர்கள் ஆரிய முதலாளிகளையும் தோலுரிக்கவே இந்த பயணம்.

பெரியாரும் திராவிடமும் இந்த மக்களுக்கு செய்த நன்மைகள் என்ன? ஆரியம் செய்துகொண்டிருக்கும் அழிவுகள் என்ன என்பதை இந்த பரப்புரையின் வாயிலாக விளக்குகிறது திராவிடர் விடுதலைக் கழகம்!

அனைவரும் வாரீர்!.... ஆதரவு தாரீர்!!...

**புரட்சிப் பெரியார் முழக்கம்**

**ஆண்டு சந்தா : ரூ.300/-**

**ஐந்தாண்டு சந்தா : ரூ.1500/-**

**பேச : 63697 76351**

# தமிழ் இலக்கியங்களை அலசி ஆராய்ந்தவர் பெரியார்!

**-கொளத்தூர் மணி**

***(பிப்ரவரி 1-ஆம் தேதி சென்னை ராயப்பேட்டையில் உள்ள விஜய் திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிமிர்வோம் வாசகர் வட்ட 28-வது சந்திப்பு நிகழ்ச்சியில் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை)***

எப்போதுமே அரசியலிலோ அல்லது மற்றவற்றிலோ படிப்படியாக முன்னேறி செல்வதுதான் அனைவருக்கும் வழக்கம். ஆனால் மணியரசன் அவர்கள் ஒரு பொதுவுடைமைவாதியாக இருந்து, தமிழ் தேசியம் பேசி, இப்போது ஜாதியவாதிகள் பக்கம் வந்து நின்று கொண்டிருக்கிறார். இன்னும் சிறிது நாட்களில் முழுமையாக வெளிப்பட்டு விடுவார். 1956 நவம்பரில் மொழிவாரி மாநிலங்கள் உருவானபோது, யாரெல்லாம் தமிழ்நாட்டில் இருந்தார்களோ அவர்கள் எல்லாம் தமிழர்கள் என்று முதலில் ஒரு வரையறை வைத்திருந்தார்.
எந்த அறிவியல் அடிப்படையில் இந்த வரையறையை வைத்தார் என்பது தெரியாது. சீமானுக்கு ஆசானாக சேர்ந்து விட வேண்டும் என்ற ஆசையாக கூட இருக்கலாம்.

அண்ணா நினைவுநாளையொட்டி இந்த நிமிர்வோம் வாசகர் வட்டம் நடைபெறுகிறது. 1934-ஆம் ஆண்டு மே 21-ஆம் தேதி திருப்பூரில் நடைபெற்ற மாநாட்டில்தான் பெரியாரை முதன்முதலில் சந்தித்தார் அண்ணா. அங்கு “சமதர்மம்” என்ற தலைப்பிலே பெரியார் ஆற்றிய உரையைக் கேட்டுத்தான் அண்ணா இயக்கத்திற்கு வந்தாரா என்றால் இல்லை. அதற்கு முன்பே அண்ணாவுக்கு பொதுவுடமை தத்துவத்தைப் பற்றிய புரிதலும் அதன் மீது ஈர்ப்பும் இருந்தது. 1932-ஆம் ஆண்டு அவர் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த போது ஒரு கட்டுரை போட்டி நடந்தது. அதற்கான கட்டுரைக்கு அவர் எடுத்துக் கொண்ட தலைப்பு **“மாஸ்கோ மாப் பெரேட்”** என்பதாகும். அதில் மாஸ்கோவில் நடந்த பெரும் அணிவகுப்பைப் பற்றிய ஓர் கட்டுரையை அண்ணா எழுதினார். சோவியத்தில் பொதுவுடைமை மலர்ந்தும் நடந்த பேரணி அது. அதில் எழுந்த உணர்ச்சி வெள்ளம் குறித்து எழுதிவிட்டு கடைசியாக **‘முதலாளித்துவம் வீழட்டும் பாட்டாளி வர்க்கம் உயரட்டும்’** என்ற சொல்லோடு மாணவராக இருந்தபோதே அண்ணா எழுதினார்.

### பெரியாரும் இலக்கியமும்!

பார்ப்பன ஆதிக்கத்தை எப்படி எல்லாம் விளக்க வேண்டும் என்பதற்கு பெரியார் சொற்பொழிவாக கருத்துக்களைச் சொன்னார். இன்னொரு பக்கம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் போன்றவர்கள் அதை கவிதைகளாக கொடுத்தனர்.குத்தூசி குருசாமி போன்றவர்கள் அதை எழுத்துக்களாகக் கொடுத்தார்கள். இந்த ஆண்டு கூட நாங்கள் திராவிட இயக்கக் கவிஞர்கள் என்றுதான் கழக நாள்காட்டி வெளியிட்டோம். ஏராளமான கவிஞர்கள் பெரியாரியலை முன்னெடுத்துச் சென்று இருக்கிறார்கள். தங்கள் தங்கள் வழியில் அதை வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

இப்போது தமிழ்த்தொண்டு என்று வருகிறபோது பெரியாருக்கும் இலக்கியத்தை பற்றி என்ன தெரியும் என்று கேட்கிறார்கள். பெரியார்தான் அதிகமாக தமிழ் இலக்கியங்களைப் படித்திருக்கிறார். அதற்கு 2,3 எடுத்துக்காட்டுகளை சொல்ல வேண்டும். **“உயர்திணை என்பது மக்கள் சுட்டே”** என்று தொல்காப்பியத்தில் இருக்கிறது. நன்னூலில் **“மக்கள் தேவர் நரகர் உயர்திணையே”** என்று இருக்கிறது. **மக்கள் மட்டும்தான் தொல்காப்பியத்தில் இருந்தனர், தேவன் எங்கிருந்து வந்தான்? அவன்தோற்றம் என்ன?, அவன் எப்படி நம் இலக்கணத்திற்குள் வந்தான்? என்று யாராவது கேட்டிருக்கிறோமா சிந்தித்து இருக்கிறோமா?”** என்ற கேள்வியைப் பெரியார் எழுப்புகிறார். தொல்காப்பியத்தையும், நன்னூலையும் படித்து ஆராய்ந்து இக்கேள்வியை பெரியார் எழுப்பியிருக்கிறார்.
**“என்னை நம்பி இப்பழியேற்றேன்”** என்று கம்பராமாயணத்தில் இராவணன் சொல்லுகிறான், நான் சொல்லுகிறேன் என்னை நம்பி இப்பணியேற்றேன் என்று சொல்லுகிறேன்” என்று கூறுயிருக்கிறார் பெரியார். அதாவது கம்ப ராமாயணத்தையும் படித்திருக்கிறார் பெரியார். **“குடியரசை நானே எழுதி, நானே அச்சு கோர்த்து, நானே அச்சடித்து, நானே அதை படித்தாலும் குடியரசு வந்து கொண்டே இருக்கும்”** என்றும் சொன்னார்.

**“உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்.**
**நிலைபெறுத்தலும். நீக்கலும். நீங்கலா**
**அலகு இலா விளையாட்டு உடையார்-அவர்**
**தலைவர்; அன்னவர்க்கே சரண் நாங்களே”**

என்று கம்ப இராமாயணத்தில் கடவுள் வாழ்த்துப் பாடல் ஒன்று உள்ளது. இதுகுறித்து கேள்வி எழுப்பியிருக்கும் பெரியார், **“ஒரு கடவுள் உற்பத்தி செய்வாராம். இன்னொரு கடவுள் காப்பாற்றுவாராம். ஒருத்தர் சாவுகிறாராம். மண் பச்சை பானை வாங்கி எடுத்து வைப்பாராம், மற்றொருவர் சூலையில் வைத்து சுட்டு காப்பாற்றுவாராம். மற்றொருவர் உடைப்பாராம்? என்ன இது? ஆக்கலும் நிலைப்பெறுத்தலும் அழகிலா விளையாட்டு”** என்று விமர்சனங்களை வைத்தவர் பெரியார்.
தமிழ் இலக்கியங்கலை ஏதோ தமிழறிவு இல்லாதவர் போலவும், இவர்களெல்லாம் தமிழை முழுமையாகக் கற்றவர்கள் போலவும் பேசிக் கொள்கிறார்கள்.

### திருக்குறளை பரப்பினார்!

அதேபோல பெரியார் நடத்திய திருக்குறள் மாநாட்டையும் எண்ணிப்பார்க்க வேண்டும். இப்போது நினைத்துப்பார்த்தால் கூட வியப்பாக இருக்கிறது. **“தமிழக வாழ்வியல் பண்பாட்டு மாநாடு”** என்று அதற்கு கூட அடைப்புக்குள் தலைப்பு கொடுத்தார் பெரியார்.

> **திருக்குறளை மலம் என்று பெரியார் சொன்னார் என்று சில மலங்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள் இப்போது. பெரியார் சொன்னது கம்பராமாயணத்தை.**
> **"கம்பராமாயணம் தங்க தட்டில் வைத்த அமேத்தியம்" என்று சொன்னார். அமேத்தியம் என்ற சொல்லுக்கு பொருள் மலம். அமெத்தியம் தங்கத்தட்டில் தான் வைத்து கொடுக்குறான், அதுக்காக அதை சாப்பிட முடியுமா? அப்படித்தான் ராமாயணமும் அதில் உள்ள செய்திகள் நமக்கு உவப்பானதில்லை.**

பல்லாயிரக்கணக்கில் திருக்குறள் நூல்களை அச்சடித்து பரப்பினார் பெரியார். 6 அணா விலைக்கு திருக்குறளை போட்டு அனுப்பி விட்டார். ஆனால் அடக்க விலை 5 அணா மட்டுமே ஆனது. இதை கணக்கு போட்டு அடுத்த நாள் அறிக்கை விடுத்தார். **“ஆறணா விலை போட்டு முகவர்களுக்கு திருக்குறள் நூல்களை அனுப்பி இருக்கிறோம். அடக்க விலை பார்த்தபோது 5 அணாவாகத்தான் இருக்கிறது. எனவே முகவர்கள் தயவு செய்து ஐந்து அணாவுக்கே விற்குமாறு கேட்டுக்கொள்கிறோம். வாங்குபவர்களும் ஐந்து அணா என்று கேட்டு வாங்குமாறும் தெரிவித்துக் கொள்கிறேன்”** என்று குறிப்பிட்டிருந்தார் அந்த அறிக்கையில். ஒரு அணா அதிகமாக் இருந்தால் ஒருவேளை திருக்குறளை மக்கள் வாங்காமல் விட்டுவிடுவார்கள். இது எல்லா மக்களிடம் போய்ச்சேர வேண்டும் என்ற எண்ணத்தில் விலை குறைக்கப்படுவதாக அறிவித்தார்.
இலக்கியங்களாக கம்பராமாயணத்தையும், பாரதத்தையும் படித்துக் கொண்டிருந்த நமக்கு திருக்குறளைப் பற்றிய ஒரு அறிமுகத்தைத் தந்தவர் பெரியார். ஆனால் பெரியார் நடத்திய திருக்குறள் மாநாட்டில் பா.வே. மாணிக்க நாயக்கர் பேசினார். நாயக்கர் என்று பெயரில் வருவதால் ஒருவேளை இவர் பெரியாரின் ஜாதி, அதனால் உரையாற்ற வைத்தார் என்று கூட சொல்லுவார்கள். அது அவருக்குக் கொடுக்கப்பட்ட பட்டம். மாணிக்க நாயக்கர் வேறு சமூகத்தைச் சேர்ந்தவர். அவர் ஒரு பொறியாளர். மேட்டூர் அணையை கட்டுகிறபோது கோட்டப் பொறியாளராக இருந்தவர் (டிவிஷனல் இன்ஜினியர்). அப்போது இங்கிலாந்து அனுப்பப்பட்டு பயிற்சியும் எடுத்துவந்தவர். தமிழறிஞரும் கூட.

அவர் எந்த மாதிரி தமிழ் அறிஞர் என்றால், கம்பனைப் பற்றியும் விமர்சனம் செய்வார். அவரைப்பற்றி பெரியார் கூறியபோது, **“எழுத்துச் சீர்திருத்தைப் பற்றி யோசித்துக் கொண்டு இருக்கிறபோது பா.வே.மாணிக்கம் வந்தார். ஓம் என்ற ஒலியிலிருந்துதான் எல்லா எழுத்துக்களும் வந்ததன என்று சொன்னார். அன்றே எழுத்துச் சீர்திருத்தத்தை மறந்துவிட்டேன்”** என்று கிண்டலாகச் சொன்னார்.

ப.வே மாணிக்கர் **"வால்மிகியின் வாய்மையும் கம்பனின் புளுகும்"** என்ற தலைப்பில் ஒரு புத்தகம் எழுதி இருக்கிறார்.வால்மிகி எழுதிய உண்மையானச் செய்திகளைக் கம்பன் தன்னுடைய பொய்க் கதைகளை கட்டவிழ்த்து எழுதி இருக்கிறார் என்று அந்த நூலில் விளக்கமாக எழுதி இருக்கிறார். கம்பன் எவ்வளவு துரோகம் செய்து இருக்கிறார் தமிழ் இனத்திற்கு என்று எழுதிய தமிழ் அறிஞர். எதை சொன்னாலும் திருக்குறளை சொல்லி தான் விளக்கம் சொல்லுவார்.

திருக்குறளுக்கு உரையாசிரியர்கள் எழுதிய உரையைப் படித்த போது இவ்வளவு மோசமான நூல் திருக்குறள் என்று நினைத்து கொண்டிருந்தார் பெரியார். நம்மவர்களுக்குப் பரிமேலழகர் எழுதிய உரைப் தான் சிறந்தது என்று சொல்லிக்கொண்டே இருப்பார்கள். ஆனால் எவரும் சரியாக படித்து இருக்க மாட்டார்கள். பரிமேலழகர் எழுதிய திருக்குறள் உரையில் அறத்துப்பால் அதிகாரத்தில் எழுதிய அறம் என்றால் என்ன?

**“மனு முதலிய நூலோர் விதித்தன செய்தலும் விலங்கியன ஒழிதலும் அறம் ஆகும்”.**
அறம் என்றால் மனுநீதி சொல்வதைச் செய்வதும், வேண்டாம் என்பதை செயயாமல் இருப்பதும் என்று எழுதி இருக்கிறார். இதைப் படித்தால் பெரியார் திருக்குறளை ஏற்றுக்கொள்ளுவாரா?. ஒழுக்கம் என்றால்
என்ன **“அந்தந்த வர்ணத்தார் தமக்குரியத் தொழிலை தவறாமல் செய்வது ஒழுக்கமாகும்.”**
இதை பெரியார் ஒப்புக்கொள்ளுவாரா...இந்த உரைகளைத் தான் பரிமேலழகர் எழுதினார். இதை பார்த்த பெரியார் திருக்குறள் மாநாட்டில் பல தீர்மானங்களை நிறைவேற்றினார். அதில் **எளிய குறளை தொடக்கப்பள்ளியிலும், கடினமான குறளை உயர்நிலைப் பள்ளியிலும், சிக்கலான குறளை கல்லூரியிலும் பாடமாக வைக்க வேண்டும் என்று தீர்மானம் போட்டார்.**
குறளுக்கு அறிவுக்குப் பொருத்தமான உரையை எழுத வேண்டும் என்று ஒரு ஐவர் தலைமையில் ஒரு குழுவை அமைத்தார். அந்த குழுவில் புலவர் குழந்தை , புரட்சி கவிஞர் பாரதிதாசன் போன்ற திராவிட இயக்க கவிஞர்கள் அதில் இருக்கிறார்கள். மற்ற மூவரும் தமிழ்ப்புலவர்கள்.
அதில் திருக்குறள் உரையை எழுதியவர்கள் பாரதிதாசன், புலவர் குழந்தை மட்டுமே திருக்குறளுக்கு உரையை எழுதினார்கள்.
வேறு எந்த தமிழறிஞரும் அன்றைய காலத்தில் எழுதவில்லை; திராவிடர் கவிஞர்கள் தான் திருக்குறளுக்கு சரியான உரையை எழுதினார்கள்.

(தொடரும்)

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# பரப்புரைக்கு தயாராகும் கழகம்!

**சென்னை:** மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் 18-02-23 கழக தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. கழக தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்கினார். கழக சேத்துப்பட்டு அமைப்பாளர் இராசேந்திரன் அவர்கள் கடவுள், மறுப்பு, ஆத்மா, கொள்கையை கூறினார்.

மாவட்டச் செயலாளர் உமாபதி தொடக்க உரையாக சென்னை மாவட்ட கழகம் கடந்த ஆண்டு செய்த சாதனைகளையும், தற்போதைய அரசியல் சூழல்களையும் விளக்கினார். கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசிகுமரன் சென்னையில் கடந்த ஆண்டு நடந்த **“எது திராவிடம்,எது சனாதனம்”** தலைப்பில் 200 கூட்டங்களைச் சிறப்பாக செய்ததற்கு உழைத்த அனைத்து தோழர்களையும் பாராட்டி வருகிற பரப்புரைப் பயணத்தின் தேவைகள் குறித்துப் பேசினார். கழகத் தலைமை குழு உறுப்பினர் அன்பு தனசேகரன் உரைக்குப் பிறகு கழக மாவட்ட அமைப்பாளர் எட்வின் பிரபாகரன் புதிய தோழர்களை இன்னும் அமைப்பாகக் கட்டமைக்க ஆலோசனைகள் வழங்கினார். தாம்பரம் பகுதி அமைப்பாளர் அருண் கோமதி நவீன காலத்தில் தொழில்நுட்ப வளர்ச்சியைப் பயன்படுத்த வேண்டியத் தேவை குறித்து உரையாற்றினார். சுகுமார், மனோகரன், பிரகாசு, தேன்மொழி, மாணவர் கழக பேரன்பு உள்ளிட்ட தோழர்கள் தங்களின் கருத்துக்களைப் பதிவு செய்தனர். ஆவடி பகுதியைச் சேர்ந்த பிரனேஷ் ராஜ் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். கழகத் தலைவர் அவருக்கு புத்தகங்கள் வழங்கினார். பல்லாவரம் பகுதி அமைப்பாளராக அழகிரி தேர்வு செய்யப்பட்டார். பெரியார் முழக்க பொறுப்பாளராக பிரசாந்த் நியமிக்கப்பட்டார். நிமிர்வோம் வாசகர் வட்ட ஒருங்கிணைப்பாளராகவும் பிரகாசுடன் இணைந்து பிரசாந்த் செயல்படுவார். நிறைவாக கழக தலைவர் **“பெரியார் இன்னும் ஏன் எதிரிகளை பதற வைக்கிறார்?”** என்ற தலைப்பில் **பிரச்சார பயணத்தின் தேவை குறித்தும் பரப்புரை பயணம் எப்படி இருக்க வேண்டும் என்பதை தெளிவாக விளக்கவுரை ஆற்றினார். சென்னையின் பரப்புரை பயணம் சிறப்பாக அமைய புருஷோத்தமன் 5000 ரூபாயை கழகத் தலைவரிடம் வழங்கினார். பரப்புரைப் பயணம் மார்ச் 15 தொடங்கி மார்ச் 22 மயிலாடுதுறையில் நிறைவடைகிறது. பரப்புரைப் பயணத்துக்கு வரும் தோழர்கள் பெயர் பட்டியல் தருமாறும்வர இயலாத தோழர்கள் தங்களால் முடிந்த நிதியுதவி அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.**






**சேலம்:** கிழக்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகக் கலந்துரையாடல் கூட்டம்! 16.02.2025 அன்று காலை 10.00 மணியளவில் ஏற்காடு ஷோபா ஹோட்டலில் நடைபெற்றது. கலந்துரையாடல் கூட்டத்திற்கு திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி தலைமை வகித்தார்.

**தீர்மானங்கள்:**

1). ஒவ்வொரு பகுதிகளிலும் துண்டறிக்கை வாயிலாகவும், வீதி நாடகங்கள் வாயிலாகவும் தெருமுனைக் கூட்டங்களைத் தொடர்ந்து நடத்துவது எனவும்,

2).தோழர்களின் சந்திப்பை விரிவு படுத்தும் வகையிலும், தொடர்புகளை விரிவு படுத்தும் வகையிலும் வருகின்ற ஜூன் மாத இறுதி வாரத்தில் ஏற்காட்டில் குடும்ப விழா நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

3). சேலம் மாவட்டக் கழகத்தின் எதிர்கால செயல் திட்டங்களுக்காக மாவட்ட நிதியை உருவாக்குது எனவும், அந்த நிதியை துண்டறிக்கைகள், கூட்டங்களுக்கு பயன்படுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

**கலந்து கொண்டோர்:** சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர் சக்திவேல், சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் டேவிட், சேலம் (கி) மாவட்ட அமைப்பாளர்கள் ஏற்காடு பெருமாள், முத்துமாணிக்கம், சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், ஏற்காடு ஒன்றியச் செயலாளர் கார்த்திகேயன், மாவட்ட இளைஞர் அணித் தலைவர் தேவபிரகாஷ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் தங்கதுரை, சிவசண்முகம், சேலம் மாநகர செயலாளர் ஆனந்தி, சிந்தாமணியூர் நகரத் தலைவர் ஜெய பிரகாஷ், செயலாளர் ரவிக்குமார், சேலம் மாநகர அமைப்பாளர் தேவராஜ், ஏற்காடு உலகநாதன், பிரபு, சுதாகர், செல்வம், ரமேஷ், டேவிட் குமார், ஈழ பிரபாகரன், ஜெயக்குமார், கேசவன், ரமேஷ், முருகேசன், ஜாஸ்மி ஸ்ரீ, இளம்பிள்ளை சேகர், குப்புசாமி, வெள்ளார் மனோ, அருண்குமார், சர்மா, நரேந்திரன், சங்கீதா, ஆத்தூர் நகரத் தலைவர் மகேந்திரன், கணபதி, சுதர்சன், ஆனந்த், எழில் ஆகியோர் கலந்து கொண்டனர். இறுதியாக ஏற்காடு தேவபிரகாஷ் நன்றி கூற கலந்துரையாடல் கூட்டம் நிறைவு பெற்றது.

## பேரறிஞர் அண்ணா நினைவுநாள் தெருமுனைக்கூட்டம்

பேரறிஞர் அண்ணா நினைவுநாள் தெருமுனைக் கூட்டம் 22.02.2025 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கோவை கவுண்டம்பாளையத்தில் மாநகரத் தலைவர் நிர்மல்குமார் தலைமையில் நடைபெற்றது. மாநகர அமைப்பாளர் கிருட்டிணன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

கோவை மாவட்டக் கழகச் செயலாளர் சூலூர் பன்னீர்செல்வம், கோவை மாநகரச் செயலாளர் வெங்கடேசன், ச.மாதவன், லோகநாயகி, தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் நவீன் உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினார்கள்.

சு.செ.சம்பத் (மதிமுக), இராமதாஸ் (விசிக), சாந்தகுமார் (தோழர் அறக்கட்டளை), இராவணன் (ஆதித்தமிழர் பேரவை), சித்ரா (மாமன்ற உறுப்பினர்), ஈஸ்வரன் (திமுக) உள்ளிட்ட தோழமை இயக்க நிர்வாகிகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர். அவர்களுக்கு கழகத் தோழர்கள் ஸ்டாலின் ராஜா, அன்னூர் விஷ்ணு ஆகியோர் கழக வெளியீடுகளை வழங்கி சிறப்பித்தனர். கூட்டத்தை பொதுமக்கள் ஆர்வத்துடன் கவனித்தனர்.

## ஜாதி மறுப்பு சுயமரியாதைத் திருமணம்



தோழர்கள் நரேன் (எ) நரேந்திரன்-சங்கீதா இணையரின் ஜாதி மறுப்பு சுயமரியாதைத் திருமணம் திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் தோழர் கொளத்தூர் மணி முன்னிலையில், தலைமைக் குழு உறுப்பினர் ஈசுவரன் தலைமையில் நடைபெற்றது.

காவலாண்டியூர் தந்தை பெரியார் படிப்பகத்தில் வாழ்க்கை இணையேற்பு ஒப்பந்த உறுதிமொழி எடுக்கப்பட்டு எளிமையான முறையில் இந்தத் திருமணம் நடைபெற்றது. மணமக்கள் மாலை அணிவித்து மோதிரம் மாற்றிக் கொண்டனர். இந்நிகழ்வில் சேலம் மாவட்டக் கழக ஒருங்கிணைப்பாளர் நங்கவள்ளி கிருஷ்ணன், மாவட்ட இளைஞர் அணி செயலாளர் பிரபாகரன், வழக்கறிஞர் சரவணன் பரத், காவை. தங்கராசு, மாரி, மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர் மேட்டூர் நாகராஜ், ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் எழில் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

திருமண நிகழ்வின் மகிழ்வாக இணையர்கள் புரட்சிப் பெரியார் முழுக்கத்திற்கு ரூபாய் ₹1000/- வளர்ச்சி நிதியை கழகத் தலைவரிடம் வழங்கினர்.

## கடலூரில் கழக ஆர்ப்பாட்டம்!

19-02 -2024 அன்று மாலை 4 மணியளவில் சிதம்பரத்தில் யுஜிசி திருத்த வரைவு அறிக்கையை கண்டித்து கடலூர் மாவட்டக் கழகத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட கழக அமைப்பாளர் அ.மதன்குமார் தலைமையேற்றார்.

இந்தஆர்ப்பாட்டத்திற்கு ந.கொளஞ்சி, முத்துகிருஷ்ணன், கிருஷ்ணகுமார், தாமரை, விக்னேஷ், தகவி, பார்த்திபன், ராகுல், ரூபன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.செ.பிரகாஷ் வரவேற்று தொடக்கயுரையாற்றினார், இதனையடுத்து கவி, வீரகுமார்,சாகுல் ஹமீது மனித நேய மக்கள் கட்சி, கணபதி ஏகாதிபத்தி எதிர்ப்பு இயக்கம், பாலராஜ் புரட்சிகர மாணவர் இயக்கம் மற்றும் இளைஞர் முன்னணி, இசாக் அலி மே17 இயக்கம், ரமேஷ்மித்ரன் தபெதிக, வழக்கறிஞர் செந்தில் அகில இந்திய வழக்கறிஞர்கள் சங்கம், தயாநிதி மக்கள் தமிழகம் கட்சி, குறிஞ்சிவளவன் விடுதலை சிறுத்தைகள் கட்சி, இளையரசன் விழுப்புரம் மாவட்டத் தலைவர் திவிக, ப.அறிவழகன் மாவட்ட அமைப்பாளர் தமிழ்நாடு அறிவியல் மன்றம், மகேஷ் மயிலாடுதுறை மாவட்ட செயலாளர் திவிக, அய்யனார் தலைமைச் செயற்குழு உறுப்பினர் திவிக, ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர். நிறைவாக வெற்றிமணி நன்றியுரையாற்றினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS
Under WPP

Posted : February 28, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran